Mayuram-Madurai Express Buses

* 111 *Q.*—THIRU K. M. RAMASWAMI GOUNDER : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether there is any proposal to introduce an express bus service between Mayuram and Madurai (via) Kumbakonam, Thanjavur and Tiruchirappalli and

(*b*) if so, the stage at which the matter now stands ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) இல்லை.

(இ) இவ்வின எழவில்லை.

THIRU B. VENKATASWAMY : Sir, Road-Train buses and double decker buses are introduced at Bangalore, in the Mysore State to facilitate passengers and also to effect economy. So, will this Government come forward to introduce such buses in our State ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : கொடுக்கப்பட்டிருக்கிற கேள்வியோடு தொடர்பு கொள்ளவில்லை.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : தலைவர் அவர்களே, இப்போது இல்லாவிட்டாலும் மாயூரத்தில் இருந்து மற்ற இடங்களுக்குப் போக அங்கிருந்து எதிர்காலத்திலாவது பஸ்கள் புறப்படுவதற்கு ஏற்பாடு செய்ய முடியுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இப்போது மாயவரத்தில் இருந்து தஞ்சை, திருச்சிக்குத் துரித பஸ்கள் போய்க்கொண்டிருக்கின்றன. மதுரை போக வேண்டுமென்று விரும்புகிறவர்கள் திருச்சிக்குப்போய் அங்கிருந்து செல்லலாம்.

திரு. வி. கே. கோதண்டராமன் : கடுவிசைப் பேருந்து வண்டி, விரைவுப் பேருந்து வண்டி என்று இரண்டு போட்டிருக்கிறதே, இரண்டுக்கும் என்ன வித்தியாசம் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இரண்டும் ஒன்றுதான்.

Imported foodgrains

* 112 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state the quantity of imported foodgrains allotted to this State for the year 1967–68 and the subsidy given by the Centre, therefor ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : 1967-ஆம் ஆண்டு எப்ரல் திங்கள் முதல் 1968-ம் ஆண்டு மார்ச் திங்கள் வரையிலான காலஅளவிற்கு இந்திய அரசு இம்மாநிலத்திற்கு மொத்தம் 49,500 டன் கோதுமையும் 1,07,949 டன் கோதுமைப் பண்டங்களும் ஒதுக்கியுள்ளது. கோதுமையின் வெளியீட்டு விலை குவின்டால் ஒன்றுக்கு ரூ. 55 ஆகும். இதில் ரூ. 12 உதவித்தொகையாகும். கோதுமைப் பண்டங்களின் விற்பனையிலும் குவிண்டால் ஒன்றுக்கு இதே அளவு உதவித் தொகை சேர்க்கப்பட்டுள்ளது. இது 31—12—1967 வரை செயலிலிருந்தது.

1—1—1968 முதல் இந்திய அரசு கோதுமை வெளியீட்டு விலையை குவின்டால் ஒன்றுக்கு ரூ. 55-லிருந்து ரூ. 67 ஆக உயர்த்தியது. அதன் மூலம் குவின்டால் ஒன்றுக்கு ரூ. 12 உதவித்தொகையை நிறுத்திவிட்டது. அதன் விளைவாகக் கோதுமைப் பண்டங்கள் குறித்த உதவித்தொகை